**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்.**

MCOP No: 155/2022 நாள் 07.11.2025

சாட்சியானவருக்கு நீதிமன்றத்தின் மூலமாக சாட்சிய சம்மன் எடுத்துக்கொள்ளப்பட்டு சர்வாகி அழைக்கப்பட்டு ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவரை இன்று **எ.ம.சா.1** ஆக 1989ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது ஏற்பாட்டின்படி கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் திரு.K.மாரிராஜா என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | R.ரவிச்சந்திரன் | தாலுகா | |
| த–பெ | ராஜ் | தொழில் | உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், ஸ்ரீவில்லிபுத்தூர். |
| கிராமம் | ஸ்ரீவில்லிபுத்தூர் | வயது | 48 |

**முதல் விசாரணை**

TN 67 AV 9964 என்ற ஆட்டோவானது பயணிகளை மட்டுமே ஏற்றிச்செல்லக்கூடிய பயணிகள் ஆட்டோவாகும். அந்த பயணிகள் ஆட்டோவில் ஓட்டுநர் ஒருவரும், பயணிகள் மூவரும் பயணம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. நான் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கப்பட்ட அனுமதி கடிதம். அது **எ.ம.சா.ஆ.1.** TN 67 AV 9964 என்ற ஆட்டோவின் அனுமதி சீட்டை நான் கொண்டுவந்துள்ளேன்.அதனை நான் தாக்கல் செய்கிறேன். அது **எ.ம.சா.ஆ.2**. அனுமதிக்கப்பட்ட பயணிகள் எண்ணிக்கையை விட கூடுதலாக பயணிகள் பயணம் செய்தால் அந்த ஆட்டோவனது விபத்துக்குள்ளாக வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு அளவுக்கு மீறி பயணிகளை ஏற்றிச்சென்று பயணம் செய்வது என்பது மோட்டார் வாகன விதிமுறைகளை மீறிய செயலாகும். மேற்படி ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் அந்த ஆட்டோவில் 7 நபர்கள் பயணம் செய்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்தானது வத்திராயிருப்பு – தாணிப்பாறை ரோட்டில் சிவசங்கபுரம் சந்திப்பில் இருந்து மகாராஜாபுரம் என்ற ஊருக்கு ஆட்டோ திரும்பும் போது விபத்து நடந்துள்ளதாக ம.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லியுள்ளது அந்த ஆட்டோவானது ஸ்ரீவில்லிபுத்தூர் நகருக்குள் மட்டுமே இயங்குவதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி விபத்துக்குள்ளான ஆட்டோவானது ஸ்ரீவில்லிபுத்தூர் நகரில் இருந்து சுமார் 25 கி.மீ தள்ளியுள்ள அந்த கிராமத்தில் தான் நடந்துள்ளது. அவ்வாறு அனுமதிக்கபட்ட பகுதிகளை தாண்டி ஆட்டோவை இயக்கினால்அது மோட்டார் வாகன சட்டத்தை மீறிய செயல் என்றால் சரிதான். சம்மந்தப்பட்ட ஆட்டோவை கைப்பற்றி சம்மந்தப்பட்ட காவல்

நிலையத்தில் ஒப்படைத்து அபராத தொகையை செலுத்திய பின்பு தான் அந்த ஆட்டோவை விடுவிக்கப்படும் என்றால் சரிதான். இந்த விபத்து சம்மந்தப்பட்ட ஆட்டோவானதை கைப்பற்றி வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டு வாகனம் விடுவிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை மனுதாரர் தரப்பில்**

ஆட்டோவில் பயணம் செய்ததாக சொல்லும் நபர்களை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 07th day of November 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.